# சார்பு நீதிமன்றம், சீர்காழி.

**அசல் வழக்கு எண். 369/2022**

2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 06-ம் நாள் செவ்வாய்கிழமை PW2-இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்தியசாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி. S.மும்தாஜ், B.Sc.,B.L., சார்பு நீதிபதி, சீர்காழி அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு, பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 06.08.2024 | தந்தை/கணவர் பெயர்: | |
| பெயர்: | திவ்யபாரதி (PW-2) | தாலுக்கா: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தொழில்: | | வயது : | |

<u>சாட்சி நீதிமன்றம் மூலம் அழைப்பாணையின் பேரில் அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை</u>

நான் கிராம அலுவலராக ஓலையாம்புத்தூரில் கிராமத்தில் பணிபுரிகிறேன். நீதிமன்றத்திலிருந்து அழைப்பானை வந்ததன் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். ஓலையாம்புத்தூரில் காருகுடி என்பது குக்கிராமம் ஆகும். நத்தம் நிலவரித்திட்ட தூய அடங்கல் உண்மை நகல் தாக்கல் செய்கிறேன் அதில் புல எண் 247/9 உட்பிரிவு பழைய எண் 247/1, பா. 00165 ச.மீ பட்டா நம்பர் 96. முத்தையா மகன் பட்டுசாமி என்பது அடித்துவிட்டு பட்டா மாற்றம் செய்து சாமித்துரை மகன் பழனி வேல் என்று காலம் 13 ல் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிறகு 18.11.2020 தேதியில் அதற்கான உத்தரவு குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி அடங்க்களல் பதிவேட்டில் கால்ம் 12 ல் முத்தையா என்று கருப்பு மையால் எழுதப்பட்டு அதன் பிறகு மகன் பட்டுசாமி என்று சிவப்பு மையால் எழுதப்பட்டு சுழிக்கபட்டுள்ளது. 13 வது காலத்தில் பழனிவேல் மகன் விஜயகாந்த் என்று எழுதப்பட்டு அதற்கான உத்தரவு தேதி 11.01.2023 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த அடங்கள் பதிவேடு சாட்சி சான்றாவனம் 1 ஆகும். நத்தம் நிலவரித்திட்ட தூய சிட்டா தாக்கல் செய்கிறேன் அது சாட்ச சான்றாவனம் 2 ஆகும். அதில் புல எண் 247/9 பட்டுசாமி மகன் முத்தையா என்று நீல மையால் எழுதப்பட்டு உள்ளது அதன்பிறகு முத்தையா மகன் பட்டுசாமி என்று சிவப்பு மையால் எழுதப்பட்டு சுழிக்கப்பட்டுள்ளது. அதற்கான உத்தரவு

18.11.2020 ல் பிறப்பிக்கப்பட்டு உட்பிரிவு 2 ல் குறிப்பிடப்பட்டுள்ளது. 11.01.2023 ல் பழனிவேல் மகன் விஜயகாந்த் என்று சிவப்பு மையால் எழுதப்பட்டுள்ளது.

<u>குறுக்கு விசாரணை</u>

பொதுவாக உயிருடன் உள்ள நபருக்கு தான் பட்டா மாறுதல் வழங்கப்படும் என்றால் சரிதான்.முத்தையா பெயரில் இந்த புல எண்ணிற்கு பட்டா வழங்கியிருந்தால் அவர் தந்தை பெயரரை குறிப்பிட்டுஇருப்பார்கள் என்றால் சரிதான். சாட்சி சான்றாவனம் 1 மற்றும் 2 ஆகியவற்றை சுழித்துவிட்டு எழுதப்பட்டுள்ளது என்றாலும் எழுத்து பிழை காரணமாக எழுதபட்டு இருக்கலாம் .இந்த புல எண் ஓலையாம்புத்தூர்கிராமம் காருகுடியில்அமைந்துள்ளது என்றால் சரிதான். இந்த பட்டா 1997 ல் வழங்கபட்டுள்ளது என்றால் அது பற்றிய குறிப்பு பதிவேட்டில் இல்லை. பட்டா வழங்கிய பிறகு தான் அதற்குரிய பதிவேட்டில் எழுதி பராமரிப்பார்கள் என்றால் சரிதான். பட்டுசாமி எந்த ஆண்டு முதல் எழுதி பராமரித்து வருகிறார்கள் என்றால் தெரியவில்லை. இந்த புல எண்ணிற்கு வாதியின் தந்தை பெயரை குறிப்பிட்டு அவரது தந்தை பெயரையும் குறிப்பிட்டு பட்டா வழங்கபட வில்லை என்றால் சரிதான். பட்டு சாமி 5 ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்து அவர் அவரது மகன் விஜயகாந்த பெயரில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**மறு விசாரணை**

நான் கிராம நிர்வாக அலுவலராக இந்த கிராமத்தில் 01.011.2021 ல் பணியில் சேர்ந்தேன்.